ஆண்டு பட்டிகை வழக்கு எண்.105/2025

DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No CC.No. 105/2025 LW- 9 PW- 7

| | | |
|---|---|---|
| Name | : | கிருஷ்ணகுமார் (புலன் விசாரணை அதிகாரி) |
| Father's/Husband's Name | : | முருகேசன் |
| Village | : | திண்டுக்கல் தாலுகா காவல் நிலையம் |
| Taluk | : | திண்டுக்கல் |
| District | : | திண்டுக்கல் மாவட்டம் |
| Age | : | 34 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd day of June 2026

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் மாலை 5:00 P.M. – 5:35 P.M.

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**(சாட்சிக்கு காணொளி காட்சி வாயிலாக சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.02.2025ம் தேதி 19.00 மணிக்கு நான் நத்தம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது பரளிபுதூர் கிராமம், கோட்டைப்பட்டியைச் சேர்ந்த தமிழ்ச்செல்வம் மனைவி ராஜேஸ்வரி என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப நத்தம் காவல் நிலையக் குற்ற எண்.89/2025 281, 125(a) BNS பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2) பின்னர் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் நத்தம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை நான் என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 27.02.2025ம் தேதி 20.00 மணிக்கு சம்பவ இடமான நத்தம் – மதுரை பைபாஸ் ரோடு டோல்கேட் அருகில் சாட்சிகள் நடராஜன் மற்றும் சொர்க்கம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5, பார்வை மகஜர் அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின்னர் சம்பவ சாட்சிகள் ராஜேஸ்வரி, நாகராஜன், மணி, கண்ணன், நடராஜன் மற்றும் சொர்க்கம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரியான மலையாண்டி என்பவரை கடந்த 28.02.2025ம் தேதி 14.00 மணிக்கு காவல் நிலையத்தில் வைத்து காரணம் கூறி கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட நபரான நடராஜன் என்பவருக்கு மருத்துவ சிகிச்சை அளித்த நத்தம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.பிரவீன்குமார் என்பவரை விசாரித்து காயச்சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் காயச்சான்றிதழின் தன்மைக்கேற்ப இவ்வழக்கின் சட்டபிரிவை 281, 125(a) BNS என்பதிலிருந்து 281, 125(b) BNSஆக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **(மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4. இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியின் வாகனமான TN 65 AJ 7078 என்ற பதிவெண்கொண்ட டாடா பிரைமா வேனை 28.02.2025ம் தேதி தணிக்கை செய்ய மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து வாகன தணிக்கைக்கு உட்படுத்தினேன். **(அந்த வேண்டுகோள்**

**கடிதம் அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அன்றைய தினமே மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கருப்பசாமி என்பவரை விசாரித்து அறிக்கை பெற்றேன். **(TN 65 AJ 7078 என்ற பதிவெண்கொண்ட டாடா பிரைமா வேனின் ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**5)** பின்னர் அதே வழக்கில் சம்பந்தப்பட்ட வாதியின் வாகனமான TN 57 CW 4359 என்ற பதிவு எண் கொண்ட ஹோண்டா DIO 125 இருசக்கர வாகனத்தை 24.03.2025ம் தேதி தணிக்கை செய்ய மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து வாகன தணிக்கைக்கு உட்படுத்தினேன். **(அந்த வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.10ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அன்றைய தினமே மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கருப்பசாமி என்பவரை விசாரித்து அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **(TN 57 CW 4359 என்ற பதிவு எண் கொண்ட ஹோண்டா DIO 125 இருசக்கர வாகனத்தின் ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இத்துடன் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து 25.03.2025ம் தேதி எதிரி மீது 281, 125(b) BNS பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

6) அ.சா.1 சம்பவம் குறித்து கேள்விப்பட்டு தான் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தனக்கு தகவல் கொடுத்த நபர் ஜெயமணி என்று சொல்லவில்லை என்றால் சரிதான், மணி என்று சொல்லியுள்ளார். சம்பவம் நடந்த இடம் ஆனது தேசிய நான்கு வழிச்சாலை என்றாலும், டோல்கேட் அருகே நடந்தது என்றாலும் சரிதான். டோல்கேட் இருக்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் இடையே சுமார் 200 மீட்டர் தூரம் இருக்கும். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்திற்கும் டோல்கேட்டிற்கும் இடையே உள்ள தூர கணக்கையும் சாலையின் அகலம் குறித்த விவரங்களை சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் டயர் மார்க் மற்றும் சிராய்ப்பு இருந்த

விபரங்கள் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். டோல்கேட் என்பதால் வாகனங்கள் மெதுவாக சென்று தான் கடக்க முடியும் என்றால் டோல்கேட்டிற்கு அருகே செல்லும்போதுதான் அவ்வாறு மெதுவாக செல்ல முடியும்.

7) வழக்கில் சம்பவத்தை பார்த்த நபர்கள் யாரும் சம்பவ வாகனங்களின் வேகம் குறித்து எண்ணிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் ரோட்டை கடப்பதற்கு பலகைகளோ சாலையில் கோடுகளோ சிக்னல் இல்லாமல் உள்ளது என்றால் சரிதான். பொதுவாக நான்கு வழிச்சாலையில் சாலையை கடக்கும் போது இரு பக்கங்களிலும் வாகனங்கள் வருகிறதா என்பதை சரிபார்த்த பின்னரே கடக்க முடியும் என்றால் சரிதான். அ.சா.1, அ.சா.2 மற்றும் சம்பவத்தை பார்த்த சாட்சிகள் எனது விசாரணையில் அ.சா.2 ரோட்டை கடப்பதற்கு முன்பு இருபுறமும் பார்த்து சமிக்கைகள் செய்து கடக்க முயன்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் ஆனது ரோட்டின் கிழக்கு பக்கத்தில் நடைபெறவில்லை என்றால் சரிதான். அ.சா.2 எனது விசாரணையில் தான் அவருக்கு பின்னால் வாகனங்கள் வந்ததாகவோ அவர்கள் சம்பவத்தை பார்த்ததாகவோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

8) அ.சா.3 எனது விசாரணையில் அவரது பெயர் மணி என்ற ஜெயமணி என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எனது விசாரணையில் லாரியின் விலாசம் KRK என்று சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தின் எந்த பகுதி ஆனது காயப்பட்ட நபர் சென்ற வாகனத்தின் மீது மோதியது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி விபரங்கள் குறித்து சம்பவத்தை பார்த்ததாக சொல்லப்படும் சாட்சியான அ.சா.3ம் என்னிடம் சொல்ல வில்லை என்றால் சரிதான். ஏ.ஆர் பதிவை நான் பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். காயம்பட்ட நபர் தன்னிச்சையாக சென்று கீழே விழுந்ததாக தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். காயம்பட்ட நபரை மருத்துவமனையில்

சேர்த்த கண்ணன் என்பவருக்கும் அ.சா.1க்கும் மருத்துவமனையில் சென்று சேர்த்தவரை தன்னிச்சையாக காயப்பட்டதாக தான் தெரியவந்துள்ளது என்றால் சரிதான்.

9) காயப்பட்ட நபருக்கு வாகன ஓட்டும் உரிமம் இல்லை என்றாலும், அவர் சம்பவத்தன்று தலைக்கவசம் அணியவில்லை என்றாலும் சரிதான். இருசக்கர வாகனம் ஆனது 28 நாட்கள் காலதாமதம் ஆகவும், லாரியானது இரண்டு நாட்கள் காலதாமதம் ஆகவும் வாகன ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். இடைப்பட்ட காலகட்டத்தில் வாகனத்தில் ஏற்பட்டுள்ள சேதாரங்கள் சரி செய்வதற்கு வாய்ப்புகள் உள்ளது என்றால் சரியல்ல. காயம்பட்ட நபருக்கு மதுரை அரசு மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அது தொடர்பான ஆவணங்களை இந்த வழக்கில் கைப்பற்றவில்லை என்றாலும், அந்த மருத்துவரை விசாரிக்கவில்லை என்றாலும் சரிதான்.

10) முதல் தகவல் அறிக்கை ஆனது நீதிமன்றத்திற்கு 71 நாட்கள் காலதாமதமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது போல் மணி என்பவர் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும், அதனால் தான் கண்ணுற்ற சாட்சி அவரது குறித்து விசாரணையில் நாகராஜ் என்பதற்கு பதிலாக நடராஜ் என்பவர் சம்பவத்தில் காயம் அடைந்ததாக முரண்பட்டு தெரிவித்துள்ளார் என்றால் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் இரவில் தயார் செய்யப்பட்டது என்றாலும் மதியம் 1.00, 2.00 மணி அளவில் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் புகார் மனு பெறப்படவில்லை என்றாலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரி அல்ல. அ.சா.1 காயம்பட்ட நபர் மற்றும் நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் அதனால் தான் விபத்து பதிவேட்டில் காயம்பட்ட நபர் தனிச்சையாக கீழே விழுந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரி.

11) சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. டோல்கேட்டில் சிசிடிவி பதிவுகள் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சிசிடிவி பதிவுகளை பார்வையிட்டதில் விபத்து சம்பவம் எதுவும் பதிவுகள் இல்லை என்பதால் தாக்கல் செய்ய இயலவில்லை. குற்ற இறுதி அறிக்கையில் சிசிடிவி பதிவுகள் பார்வையிட்டது தொடர்பாகவும், பதிவுகள் இல்லை என்பது தொடர்பாகவும் விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. காயம்பட்ட நபருக்கு இழப்பீடு பெறுவதற்காக தன்னிச்சையாக விழுந்ததை எதிரியின் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக பொய்யாக புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

Co-Ordinater @ Court Point

(Sathishmani, Junior Assistant)

Co-Ordinater @ Remote Point

Witness

மேற்படி சாட்சியத்தை, காணொளி காட்சி வாயிலாக சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சாட்சி மற்றும் இரு தரப்பு வழக்கறிஞர்கள் ஆகியோருக்கு நேரடியாக Share Option மூலமாக சரிபார்க்க பதிவு செய்யப்பட்டது. அதனை சாட்சிக்கு ஈ–மெயில் மூலமாக படித்துப்பார்க்க அனுப்பப்பட்டு, அவர் சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்து நீதிமன்றத்திற்கு மீண்டும் தபால் மூலமாக அனுப்பி வைத்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.06.02 17:56:20 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்